# தமிழீழ காவல்துறையின் இருவருட சேவையில்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

TPE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 10 இதழ் 251
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26 – 10 – 1993

## குற்றச் செயல்கள் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
தமிழீழக் காவல்துறை ஆரம்பித்த இருவருட காலத்தினுள், குற்றச்செயல்கள் பெருமளவு குறைந்திருப்பதை எமது புள்ளிவிபரத்திலிருந்து அவதானிக்கக்கூடியதாகவிருக்கிறது. இவ்வாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் நேற்று கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.
திரு. நடேசன் இதுபற்றி
(4-ம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளி விவகாரம்:
## கிளிநொச்சியில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

(கிளிநொச்சி)
ஸ்ரீலங்கா அரசு தமிழ்மாணவர் மீது மேற்கொண்டுவரும் திட்டமிட்ட வெட்டுப்புள்ளி முறையை எதிர்த்து இன்று கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும், கண்டனப் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் தமிழர் கைதுபற்றி
# அரசுக்கு எம்.பி.க்கள் கண்டனம்

(கொழும்பு)
கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதாவது பற்றியும் இனந்தெரியாதோரினால் கடத்தப்படுவது பற்றியும் தமிழ் எம். பி.க்கள் அரசுக்கு கடும்கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தின் மூலமாகவும். நாடாளுமன்றத்துக்குப் புறம்பாகவும் பல தமிழ் எம். பி.க்கள் அரசுக்கு இது தொடர்பாக கடும் நெருக்கடிகளைக் கொடுத்து வருவதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் இனம் தெரியாத வாகனங்களில் இரவு நேரங்களில் வந்து தமிழ் இளைஞர்களை கண்ணைக்கட்டி கடத்திச் செல்வது மனித உரிமை மீறல் செயல் என தமிழ் எம். பி.க்கள் அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளதுடன் தமது பலத்த கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: பொலிஸார் எந்த ஒரு குறிக்கோளுமில்லாமல் தமிழ் இளைஞர்களை
(4-ம் பக்கம் பார்க்க)

## அதி நவீன ரக டாங்கிகளை
## கொள்வனவு செய்ய அரசு முடிவு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு நவீன ரக டாங்கிகளை கொள்வனவுசெய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்புத் துறையுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
செக்கோஸ்லவாக்கியாவில் கொள்வனவு செய்யப்பட்டு அண்மையில் கிளாலியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் யாழ். தேவியில் பயன்படுத்தப்பட்ட டி. 55 ரக அதிநவீன சக்தி வாய்ந்த டாங்கிகள் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டதையடுத்தே புதிய
(4-ம் பக்கம் பார்க்க)

## 3 முதலமைச்சர்கள் அரசுக்கு எதிராக போர்க்கொடி!

(கொழும்பு)
மாகாண சபைகளுக்கு தேவையான அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக மேற்கு மாகாணசபை, தென் மாகாணசபை, மத்திய மேல் மாகாணசபை ஆகியவற்றின் மூன்று முதலமைச்சர்களும் ஒன்றாக இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளனர்.
மாகாண சபைகளுக்கு சட்டப்படி வழங்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரங்கள், நிதி சம்பந்தமான அதிகாரங்கள்
(2-ம் பக்கம் பார்க்க)

## இனவிகிதாசார முறைப்படியே அரச சேவை நியமனங்கள்

(கொழும்பு)
அரசாங்க சேவைகள், மாகாண சேவைகள், மற்றும் அரச கூட்டுத்தாபனத்திற்கான புதிய நியமனங்கள் இனவிகிதாசாரப்படியே செய்யப்படுமென பொதுநிர்வாக மாகாணசபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.
ஆளும் பதவிஉயர்வுகளின் போது இனவிகிதாசார முறை கடைப்பிடிக்கப்பட மாட்டா
(2ம் பக்கம் பார்க்க)

பரா வெளிச்ச உதவியுடன்
## கிளாலியில் ஹெலி கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
கிளாலிப் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் ஹெலிகொப்டரொன்று பலத்த கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.
பரா வெளிச்சக்குண்டுகளை ஏவியபின் கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டது.
கலிபர் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. (க-இ)

## ஆனையிறவு ஷெல்; இளைஞர் தலை சிதறி பலி

(நெல்லியடி)
பொருக்களை ஏற்றும் பொருட்டு குஞ்சுப்பரந்தனில் விடப்பட்டிருந்த படகில், ஆனையிறவிலிருந்து வந்த ஷெல் வீழ்ந்து வெடித்ததினால் அதனுள் படுத்திருந்த பட்கோட்டியான இன்பருட்டியைச் சேர்ந்த செல்வநாயகம் ரஞ்சகுமார் வயது 6 என்ற இளைஞர் தலை சிதறி நிலையில் ஸ்தலத்தில் பலியானார்.
இச்சம்பவம் நேற்றுமுன் தினம் நள்ளிரவு ஆலங்கேணி குஞ்சுப்பரந்தனில் நிகழ்ந்துள்ளது. (160-இ)

## அரங்கப் போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)
கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட அரங்கப் போட்டிக்கான பரிசளிப்பு விழா நேற்று மாலை 4-30 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் இடம்பெற்றது.
கலை, பண்பாட்டுக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பா
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் — முதல்வர் உறவில் விரிசல்

(சென்னை)
சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் உபஜனாதிபதி கே. ஆர். நாராயணனைப் பார்வையிட நேற்று சென்னை வந்த பிரதமர் நரசிம்மராவை வரவேற்பதில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் ஆளுநர் சென்னாரெட்
(4-ம் பக்கம் பார்க்க)

தங்கையே!
நீ ... ... பெரும் தீ
உலகப் பெண்களுக்கு உதாரணம்
தமிழீழம் உன்னால் தலை நிமிர்கிறது
களத்துக்கு வா கைவிலங்கை
உடைக்கலாம்

## சென்னாரெட்டியை நீக்குமாறு ஜெயலலிதா நிபந்தனை

(சென்னை)
தமிழக ஆளுநராக டாக்டர் சென்னாரெட்டி பதவி வகிக்கக்கூடாது. இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளதாக தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.
இதேவேளையில் தமிழ்நாடு இ. காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகவாழப்பாடி ராமமூர்த்தி
(4ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்


**அக்டோபரில் வியாழ, சனி மாற்றம்**

நவம்பரில் திரும்பவும் (குடும்பத்திற்கு) சனி மாற்றம் ரூபா 10/- விற்பனையாகின்றது இந்திய இலங்கை சஞ்சிகைகள், தினசரிகள், பாடசாலை உபகரணங்களும் கிடைக்கும். இ. ராசதுரை ஸ்ரோர்ஸ், இருபாலைச் சந்தி. (சி-533)

**நீங்களும் எழுதலாம்**

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசித்தால் நீங்களும் நாடகம் எழுதலாம் 1 வெட்டிக் காரர்கள் 2 முதலாம் பிள்ளை 30/- 19 வானொலி நாடகங்கள். (இ-499)

**தேவை**

தையல் கடைக்கு வெட்டித் தைக்கக்கூடிய அனுபவமுள்ள பெண்பிள்ளை ஒருவர் தேவை 27-10-93 காலை 10-00 மணியிலிருந்து பி.ப 1-00 மணிக்கும் இடையில் நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு: இதயநாதன் தையல் நிலையம் இல. 3 மினி சுப்பர் மார்க்கட் சத்திரச்சந்தையடி பெரியகடை யாழ்ப்பாணம் இ-550

**வைத்தியம்**

செங்கமாரி, (Hepatitis) குடற்புண், ஆஸ்துமா, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசுற்று வியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளை படுதல், கருவழிதல், கர்ப்பமின்மை, விரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-547)

**புலமைப் பரிசில் பயிற்சி நூல்**

வெளிவந்துவிட்டது! நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்த புலமைப்பயிற்சி நூல் 21 நவீன கட்டுரைகளையும் 10 மாதிரி வினாத்தாள்களையும் (விடைகளுடன்) தமிழ், கணிதப் பகுதிகளையும் தன்னகத்தே கொண்டது. தொகையாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம் 219) நாவலர் வீதி யாழ்ப்பாணம் சி-552


## போட்டிப் பரீட்சை

(திருநெல்வேலி)

ஒற்றாழியர்களை எழுதுநர் தரமுயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை நேற்று முன்தினம் நடைபெற்றது.

சென்ற ஆண்டு இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்பட்டது. இம்முறை அரச அதிபரினதும் முயற்சியினால் இப்பரீட்சை இங்கு நடாத்தப்பட்டது. 162-இ)

## பதிவாளர் வேண்டுகோள்

(மானிப்பாய்)

1-8-54ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுடைய அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்கள் யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆண்டில் பிறந்தவர்கள் அவசர தேவை ஏற்படின் மாவட்ட பதிவாளரின் அனுமதியைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

# இடம்பெயர்ந்தமாணவருக்கு தமிழீழ காவல்துறை உதவி

(நெல்லியடி)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் அகதிமுகாமில் தங்கியுள்ள குடும்பங்களிலுள்ள மாணவர்களின் நன்மைகருதி நாகர்கோவில் தமிழீழ காவல்துறையினர் அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள், பேனைகள் போன்றவற்றை கடந்த சில மாதகாலமாக அன்பளிப்பாக வழங்கிவருகின்றனர்.

இதனை முகாமில் தங்கியுள்ள கல்வி கற்கும் மாணவர்கள் தமது பாடசாலைத் தேவைகளைப் பெற்று பயனடைந்து வருவதாகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். -160

## மாகாண சபையில் விளையாட்டுக் கழகங்கள் பதிவுசெய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட எல்லா விளையாட்டுக் கழகங்களையும் பதிவு செய்யும் நடவடிக்கைகளை வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, கலாச்சார விளையாட்டுத் துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களுக்கும் முப்பிரதிகளில் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இப்படிவங்களைப் பூரணப்படுத்தி வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கையுடனும், அங்கத்தவர் பெயர்ப்பட்டியலுடனும் கழகத்தின் நிதி சம்பந்தமான விபரங்களுடனும் கிராமசேவை உத்தியோகத்தரின் சிபாரிசுடனும் 31-10-93-ந் திகதிக்கு முன்னர் அவ்வப்பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படாத விளையாட்டுக்கழகங்களின் பதிவுகள் ரத்துச்செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 161-இ

## கேதார கௌரி விரதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் கேதார கௌரி நோன்பும் பூசை நடைபெற்று வருகின்றது தினமும் மாலை 5-00 மணிக்கு மண்டபப் பூஜையும், அதைத் தொடர்ந்து இலட்சார்ச்சனையும் நடைபெறும்.

## விண்ணப்ப படிவங்கள்

(திருநெல்வேலி)

கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்கள் இவ் விண்ணப்பப்படிவங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் நடந்து முடிந்த கனிஷ்ட தொழில் நுட்பப் பரீட்சைப் பெறுபேறுகள் தவறவிடப்பட்டோரின் பெறுபேறுகளும் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. - 157

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நடந்த வாணிவிழாவின்போது புதிய ஏசியா துவிச்சக்கரவண்டி ஒன்று திருட்டப்பட்டுள்ளது.

விழா முடிந்ததும் சைக்கிளைக் காணாததையிட்டு அதன் உரிமையாளர் தமிழீழ காவல்துறையில் புகார் செய்துள்ளார். (ரி)

★ ★

(நெல்லியடி)

பிறந்தநாள் வைபவத்தில் கலந்துகொண்டு சிற்றுண்டி அருந்தியவரின் சுமார் 5000 ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்று திருடர்களினால் திருடப்பட்டுள்ள சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

இது பற்றி சைக்கிள் உரிமையாளரான வல்லிபுரம் முரளி பருத்தித்துறை காவல் துறையில் புகாரிட்டுள்ளார். 160)

★ ★

(அரியாலை)

யாழ் இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலய வளவில் விடப்பட்ட எஸ். ஆரோக்கியதாசன் என்பவருடைய சைக்கிள் கடந்த 23ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருட்டுப்போயுள்ளது. -59

## மலத்தியன் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திற்கு ''மலத்தியன்'', மருந்து கடந்த பல மாதங்களாக அனுப்பி வைக்கப்படாமையால் யாழ் பிரதேச மலேரியா தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மலத்தியன் மருந்து தெளிக்கும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. (72)

## உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநலச்சேவைநிலையத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அமோனியா உரம் உட்பட நெற்செய்கைக்கான உரவகைகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றது. பயிர்களுக்கான கிருமிநாசினிகளும் இந்நிலையத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன —72

## யோகன் படிப்பகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி காயாரோஹணேஸ்வரர் ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள ''அமுதசுரபி'' மண்டபத்தில் ''யோகன் படிப்பகம்'' நேற்று திறந்து வைக்கப்பட்டது.

திருநெல்வேலி சிவசக்தி இளைஞர் மன்றத்தினால் இப்படிப்பகம் திறந்துவைக்கப்பட்டது.

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை இந்து வித்தியாலயத்தின் கலை விழா இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு. செல்லையா தலைமையில் காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் இவ் வைபவத்தில் முதன்மை விருந்தினராக தமிழீழக் கல்விக் கழகப்பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் கௌரவ விருந்தினராகவும், நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு பி. காளையா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். —இ

# பொதுநல அமைப்பின் தலைமை பதவியிலிருந்து எலிசபெத் மகாராணி விலகுவார்

(லண்டன்)

எலிசபெத் மகாராணியார் அவரது புதல்வரான முடிக்குரிய இளவரசர் சார்ள்சுக்கு அனுகூலமாக பொதுநல அமைப்பு தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொள்வது பற்றி பரிசீலித்து வருவதாக லண்டனிலிருந்து வெளியாகும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

காலகதியில் பிரிட்டிஷ் சிம்மாசனத்தில் இளவரசர் சார்ள்ஸ் அமருவதற்கு தயாராகும் வகையில் அவருக்கு அரசியல் யாப்பு ரீதியில் புதிய அந்தஸ்தை வழங்குவதில் மகாராணியார் ஆர்வம் கொண்டுள்ளார் என்று ராஜதந்திர வட்டாரங்களை ஆதாரம் காட்டி லண்டன் மெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. -இ

## முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமாதான நீதிபதிகள், மொழிபெயர்ப்புத் தொழில் புரிபவர்கள், நில அளவையாளர்களுக்கான முக்கிய சந்திப்பு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நீதி நிர்வாகத்துறையின் நடுவப் பணியகத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து சமாதான நீதிபதிகளையும், மொழிபெயர்ப்புத் தொழில் புரிபவர்களையும் நில அளவையாளர்களையும் சமுகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர். -இ

## 3 முதலமைச்சர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கியவற்றை வழங்குமாறு இந்த மூன்று முதலமைச்சர்களும் அரசிடம் கூட்டாக வேண்டுகோள் விடுக்கவுள்ளனர்.

இதேவேளையில் மாகாண சபைகளுக்குத் தேவையான பொலிஸ் அதிகாரங்கள் உட்பட சகல அதிகாரங்களையும் வழங்குமாறு சம்பந்தப்பட்ட மூன்று மாகாண சபைகளும் கூட்டாக இணைந்து அரசிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காத பட்சத்தில் அரசுக்கெதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்த மூன்று முதலமைச்சர்களும் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸாநாயக்கா ஆகியோருடன் சம்பந்தப்பட்ட முதலமைச்சர்கள் மூவரும் கலந்து ஆலோசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (இ)

## கவிஞர் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய பேரவையினரால் 'நெருப்பு வலம்' கவிதை நூலுக்கு வழங்கிய ஆயிரம் ரூபா பரிசை நூலாசிரியர் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் பரிசளிப்பு மேடையில் வைத்து சுகாதார சேவைக்கு பயன்படுத்துவதற்காக யாழ், மாநகர சபை ஆணையாளர் திரு. வ. பாலசிங்கத்திடம் கையளித்தார்.

இவரது முன் மாதிரியான சேவையை சபையோர் பலரும் பாராட்டினர். (சி)

## கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மாற்றம் சஞ்சிகையினரால் நல்லூர், நாயன்மார்க்கட்டு, திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பகுதி பாடசாலைகளின் க. பொ. த. (சா / த) மாணவர்களுக்கான தமிழ்க் கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 28-ம் திகதி வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது. இக் கருத்தரங்கில் கல்விமான்கள் பிரபல ஆசிரியர்கள் கலந்து கொண்டு கருத்துரையாற்றவுள்ளனர்.


உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசி மாதம் 11ஆம் நாள் (27-10-93) புதன்கிழமை பகல் 10-02 மணி முதல் 11 38 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| எனது கனிஷ்ட புதல்வன் திருவளர் செல்வன் **கனகராசா** (B. Sc.) (சமூகசேவை உத்தியோகத்தர், திருகோணமலை) | () | எமது சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி **வைதேகி** (ஆசிரியை, ஏழாலை மகாவித்தியாலயம்) |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:

மணமகள் இல்லத்தில்
29-10-93 வெள்ளிக்கிழமை
மாலை 3-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை
நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி
செ. தம்பியப்பா
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

திரு. திருமதி
பா வயித்திலிங்கம்
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(இ-557)

யாழ்ப்பாணம்

# மக்கள் திரண்டெழுந்தால் ராணுவம் ஈழத்தைவிட்டு ஓடும்

## போர்க்கால நிகழ்வில் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள் இரண்டரை இலட்சம் வரை குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவர் எமது நாட்டை, மக்களைக் காக்க முன்வந்துவிடுவார்களானால் இதைக் கேள்விப்பட்டதுமே சிங்கள இராணுவம் எல்லையை மட்டுமல்ல நாட்டையே விட்டு ஓடிவிடும். இவ்வாறு போராளிகள் உருவாகித் தயாராகிவிட்டால் நாம் ஒரு யுத்தத்தை எதிர்கொள்ளாமலேயே தமிழீழத்தை பெற்றுவிடலாம்.

இவ்வாறு நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கின் நிகழ்வில் நல்லூர் வட்டவைப் பொறுப்பாளர் திரு. எழிலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,—

இன்றைய காலகட்டத்தில் எதிரியானவன் யாழ். குடாநாட்டினுள் இருக்கும் மக்களை அனைவரையும் பயங்கரவாதிகளாகவும், விடுதலைப்புலிகளாகவுமே கருதுகின்றான். இதனாலேயே ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதப் பிரச்சினையே எனும் கூற்று தெளிவாக்குகின்றது. எமது போராளிகள் மக்கள் ஒவ்வொருவரையும் தமது உறவினர்களாகக் கொண்டு நேசிப்பவர்கள். மனோபலம் கொண்டவர்களாக இருப்பதாலும் உறுதியான தலைமையின் வழிகாட்டலின் கீழ் செயற்படுவதாலும்தான் பெரும் படையெடுப்புடனும் ஆயுத பலத்துடனும் வரும் எதிரியை விரட்டியடிக்கின்றார்கள் என்றார்.

நிதர்சனப் பொறுப்பாளர் திரு. ஜவான் தமது கருத்துரையில்,—

இன்று சிங்களப் படைகளோ தமிழர்களை அழிக்க வேண்டுமென்ற நோக்குடனேயே புறப்படுகின்றன. இனப்படுகொலை இலங்கையில் நிகழவில்லை என்று மனித நேய அமைப்புக்களுக்கு முன்னர் தெரிவித்த ஸ்ரீலங்கா அரசு இன்று வெளிப்படையாகவே இருபதினாயிரம் தமிழ் மக்களை கொல்லவேண்டும் என கருதுகிறது. இவ்வாறான நோக்குடன் படையெடுக்கும் யுத்தத்தை நாம் எதிர்கொள்ளவேண்டும். அல்லாது போனால் அதனால் ஏற்படும் அழிவுகளை எதிர்கொள்ள வேண்டும். என்றார். 158-சி)

---

மணிவாக்கு

ஒருவனிடம் அதிகாரத்தைக் கொடுத்தால் அவனின் இயல்பை அறிந்து கொள்ளலாம்.
— யூகோஸ்லாவிய பழமொழி

---

## நமது நோக்கு

### கல்வியை வெட்டும் புள்ளி

யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் பல்கலைக்கழக ஆணைக்குழு மீண்டும் பாரபட்சம் காட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்காகத் தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்பட்டு வெட்டுப்புள்ளிகள் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றன.

இவை தமிழர்களுடைய கல்வியை வேண்டுமென்றே வெட்டும் புள்ளிகள் என்றே கருதப்பட்டன!

1971ல் அனுமதியில் மாற்றம் ஏற்பட்டபோது, அனுமதித் திட்டம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களுடைய பலத்த எதிர்ப்பின் காரணமாக 1974ல் மாவட்டக் கோட்டா முறை அமுலுக்கு வந்தது.

தமிழர்கள் அளவிற்கு மீறிய இடங்களை பெற்று விடுகிறார்கள் என்று புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டு தரப்படுத்தலை நியாயப்படுத்த பகீரதப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டன.

ஆனால், 1975ல் கலாநிதி சி. ஆர். டி. சில்வா என்ற அறிஞர் ஆய்வுசெய்து தெரிவித்த முடிவு என்ன?

"... என்ன இருந்தாலும் இந்தத் தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே! குறிப்பாக, மருத்துவம், பொறியியல் அனுமதியில் அவர்கள் மிகப் பாதிக்கப்பட்டார்கள்!"

இன்று, மீண்டும் அனுமதி விடயம் சூடுபிடித்துள்ளது. சில மாற்றங்கள் செய்யப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் பல்வேறு வழிகளாலும் தமது எதிர்ப்பைக் காட்ட முடிவெடுத்துள்ளார்கள். தமிழர்களுக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மூலம் சர்வதேசங்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது அவசியமாகும்.

இதேவேளை, இங்கு வந்திருந்த "குவேக்கர்ஸ்" குழு இந்தப் பாரபட்ச நடவடிக்கைபற்றி அறிந்துள்ளது. அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தவும் உள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசின் பாரபட்ச நடவடிக்கைகள் ஏதோ இன்று புதிதானதல்ல. ஒவ்வொரு பாரபட்ச நடவடிக்கையின்போதும் கிளர்ந்தெழுந்துவிட்டுப் பின்னர் அடங்கிப் போவதால் பயனில்லை. தன்னம்பிக்கையான முயற்சி வெற்றி பெற்றால், இத்தகைய பாரபட்சங்கள் தாமாகவே மறைந்துவிடும்!

---

## இராசிபலன்

26-10-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 10)

ஏகாதசி மு. ப. 10-51 வரை சதயம் மு. ப. 9-20 வரை இராகுகாலம் மாலை 3-03 முதல் 4-33 வரை சுபநேரம் காலை 10-33 முதல் 12-33வரை மரணயோகம் ஏகாதசிவிரதம்

மேடம்: தந்திரம், நல்லுறவு. சாஸ்திர ஆராய்ச்சி.

இடபம்: வாக்கு மேன்மை, தனசித்தை, துயரச்செய்தி

மிதுனம்: கடன் தொல்லை, நீசர்நட்பு, பிதாகண்டனம்.

கடகம்: தேகபீடை, விதண்டாவாதம், மனக்குமுறல்

சிங்கம்: தொழில் நஷ்டம், அறிஞர் சந்திப்பு, முயற்சி பலிதம்

கன்னி: முதியோர் ஆசி, ஒப்பந்தம் அதிக உழைப்பு.

துலாம்: ஏமாற்றம், தேடியது கிடைக்காமை அச்சம்.

விருச்சிகம்: வேதாந்தம். பணியாள் விவகாரம். மனக்குமுறல்

தனுசு: வைராக்கியம். பணப்புழக்கம், தொழில் சிறப்பு.

மகரம்: கடன்தொல்லை, மனக்குமுறல், சங்கடமான நிலை.

கும்பம்: தர்க்கம். உழைப்பு வெற்றி, உறவினர் வருகை.

மீனம்: கடும் யோசனை, மனையாள் துன்பம், வேற்றுமை.

— ஜோஸ்யர்.

---

# பதில் கடமை ஏற்றபின்பே ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(கொழும்புத்துறை)

ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல முன்னர் அவருடைய இடத்துக்கு பொருத்தமான ஆசிரியர் பதில் கடமையை பொறுப்பேற்ற பின்னரே இடமாற்றத்தில் செல்லும் ஆசிரியர் விடுவிக்கப்படவேண்டுமென ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக சகல மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கல்விச்சேவைச் சபையின் செயலாளர் திரு எஸ். வீரரத்தின தெரிவித்துள்ளார்.

கஷ்டப்பிரதேசத்தில் அதிக காலம் சேவையாற்றியுள்ள ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்கு மாறுவதற்குரிய வாய்ப்பை வழங்கக்கூடிய வகையிலும், நீண்டகாலமாக கடமையின் நிமித்தம் பிரிந்து வாழும் துணைவர், துணைவியர் இணைந்து சேவையாற்றக்கூடிய வகையிலுமான ஓர் இடமாற்ற வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துமாறும் அவர்களைக் கோரியுள்ளார்.

மேலும் ஆசிரியர்களை இடமாற்றுவதும், விடுவிப்பதும் தொடர்பாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் ஆலோசனையைப் பெற்று நடக்கவேண்டியது மிகவும் அவசியம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். —154-சி

---

# 170 குடும்பங்களுக்கு இன்று மீன்பிடி உபகரணம் வழங்கல்

(தாளையடி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் தற்போது யாழ். குடாநாட்டுப் பகுதியில் இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு பிரிவில் நாகர் கோவில் கிராமத்தில் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள 170 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவிருக்கின்றது. (163-சி)

---

## மட்டு. சித்தாண்டியில்

# விவசாயம் செய்ய படையினர் கட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சித்தாண்டி ஆற்றுக்கு அப்பால் ஒரு மைல் விஸ்தீரணத்துக்குள்ளேயே விவசாயிகள் வேளாண்மைசெய்ய படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆற்றுக்கு அப்பால் பெரும் பரப்பில் வயல்காணிகள் அமைந்துள்ளன. படையினரின் உத்தரவையடுத்து குறிப்பிட்டளவு காணிகளிலேயே விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ளமுடியும்.

இதேவேளை சித்தாண்டி ஆற்றோரம் நாகதம்பிரான் கோயிலில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் பெண்களும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இம்முகாம் சித்தாண்டி ஆற்றுக்கு அப்பால் வயல்பகுதிக்கான போக்குவரத்தை கண்காணிக்கவே அமைக்கப்பட்டுள்ளது. (71-சி)

---

# உடனடியாக — தமிழ் அகதிகளை சுவீடன் அனுப்பாது

(லண்டன்)

இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை சுவீடன் அரசு தற்காலிகமாக கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவீடனில் அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்ட தமிழரை நாடுகடத்துவதென அந்நாட்டு அரசு தீர்மானித்ததை தமிழ் அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதையடுத்து சுவீடன் அதிகாரிகளுக்கும் தமிழ் அகதிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து நாடு கடத்தும் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாம். (சி)

---

# புதிய இன பப்பாசி; 8 மாதத்தில் பயன் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்துகொண்டு கிட்டுவால் அனுப்பி வைக்கப்பட்ட புதிய இன பப்பாசி விதைகள் மேஜர் பிரதாப் செட்டி மாதிரிப் பண்ணையில் பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்டது மேற்படி முயற்சியானது பெரு வெற்றியளித்துள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

விதைகள் நடப்பட்டு மூன்றும் மாதத்திலே பூக்கள் உருவாகி எட்டு மாத காலத்திலே பழங்களை பெறக்கூடியதாக உள்ளது.

அண்மையில் மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையிலே நடப்பட்டிருந்த மரத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டிருந்த ஒவ்வொன்றும் சுமார் 12 கிலோ எடையுள்ள பப்பாசிப் பழங்கள் எல்லோரையும் வியப்பிலே ஆழ்த்தியுள்ளன. இவை இங்கு சாதாரணமாகக் கிடைக்கின்ற பப்பாசிப் பழங்களை விட 10 மடங்கு எடை கூடியவையாக அமைந்திருந்தன.

தற்போது இந்தப் பழத்திலிருந்து பெறப்பட்ட விதைகளில் இருந்து கன்றுகளை உருவாக்கி மேஜர் பிரதாப்செட்டி மாதிரிப் பண்ணையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது (சி)

---

# 1000 சைக்கிள்கள் வாதுவவில் வந்தன

(கொழும்புத்துறை)

பருத்தித்துறைக்கு வந்துள்ள "வாதுவ" கப்பலில் சுமார் ஆயிரம் சைக்கிள்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் வர்த்தக நிலையங்களால் இந்தச் சைக்கிள்கள் இங்கு எடுத்துவரப்பட்டன.

இதேவேளை வேறு சில பொதுநிறுவனங்களும் சைக்கிள்களை கப்பல் மூலம் தருவிக்க முயற்சித்து வருகின்றன. —154-சி

---

# 750 பலஸ்தீனியரை இஸ்ரேல் விடுவித்தது

(டெல்அவிவ்)

இஸ்ரேல் நேற்று 750 பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்தது. மேலும் கைதிகளை விடுதலை செய்வது குறித்தும் ஆராயவுள்ளது

கடந்த வாரம் மேற்கொண்ட இஸ்ரேலின் முயற்சியின்போது ஆயிரம் பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்ய இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதற்கிடையில் இஸ்ரேல்—பலஸ்தீன ஒப்பந்தத்தை எதிர்க்கும் இஸ்லாமிய தீவிரவாதிகள் இரு இஸ்ரேலிய வீரரை கடத்திச் சென்று கொலை செய்துள்ளனர். எனினும் 750 பலஸ்தீன கைதிகளையும் இஸ்ரேல் விடுதலை செய்தது. —சி

---

பசுந்தாள் உரமே மக்கிய உரமாகும்

## யாழ்தேவி நடவடிக்கை:
# இடம்பெயர்ந்தோருக்கு வாழ்விட வசதித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி நடவடிக்கையால் இடம் பெயர்ந்த அரசன் நகர் மக்களின் வாழ்விட வசதிக்கான வேலைத் திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் அணி ஒன்று போராளிகளுடனும், மக்களுடனும் இணைந்து வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் முதலாவது அணி கடந்த ஐந்து தினங்களாக மேற்படி பணியை முடித்துக் கொண்டு தற்போது திரும்பியுள்ளது. தொடர்ந்தும் இப்பணியின் பூர்த்திக்காக கட்டம் கட்டமாக பல்கலைக்கழக மாணவர்கள் இப்பணிக்காக செல்ல விருக்கின்றனர். இன்னும் சில வாரங்களில் மக்களுக்கான இப்பாரிய பணி பூரணமடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வேளாண்மைப் போட்டி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் வேளாண்மைப் போட்டி 1993/94 தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் மேற்கொள்ளும் பொருட்டு கடந்த சனிக்கிழமை பி. பகல் 2-30 மணிக்கு த. பொ. மே. நிறுவன யாழ் கோண்டாவில் செயலகத்தில் இப்போட்டியை சிறப்பான முறையில் நடாத்தவும் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாகவும் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதி மாவட்ட ஆணையாளர், உதவித் திட்டப் பணிப்பாளர் உதவி அரசாங்க அதிபர்கள், உதவி விவசாயப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளர், சமூகநல சேவை திணைக்கள பெரும்பாக உத்தியோகஸ்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், கால்நடை வைத்தியர்கள், த. பொ. மே. நிறுவனத்தினர் போன்றோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் இப்போட்டிக்கான நிபந்தனைகள், விதிகள், காலவரையறை என்பன ஆராயப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் அனைவரும் இப்போட்டியை சிறப்பான முறையில் திறம்பட நடாத்துவதற்கு தம்மாலான ஒத்துழைப்புகளையும் பங்களிப்பையும் வழங்குவதாக தெரிவித்துள்ளனர். இப்போட்டியின் செயற்பாடுகள் யாவும் யாழ் மாவட்ட கிராமிய உற்பத்திக்குழு மூலம் மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# கைதடியில் வயோதிபர் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

கைதடி வயோதிபர் சாலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் சாவகச்சேரி தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

வேலணை வடக்கைச் சேர்ந்த விஸ்வநாதி பேரின்பநாயகம் (57 வயது) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

ஒருவாரத்திற்கு முன்னர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட இவர் கடந்த 23ம் திகதி இரவு 9-00 மணியளவில் இறந்துகிடந்தாராம். காவல்துறையினர் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளனர். (155-இ)

# பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையிலிருந்து 1992ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியோரின் பெறுபேறுகள் கிடைத்துள்ளன. இப்பரீட்சையில் நானகித்தி பெற்றவர்கள் மீண்டும்விண்ணப்பிப்பதற்காக இன்று செவ்வாய்க்கிழமை பலாலி ஆசிரிய கலாசாலைக்குச் சமூகமளிக்க வேண்டுமென்று கலாசாலையின் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய வாழ்க்கைத் திறன் ஆரம்ப பிரிவுக்கான பொருட்காட்சி நாளை 27ம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-இ)

# தொண்டர் ஆசிரியர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30-ம் திகதி சனிக்கிழமை மு. பகல் 11 மணிக்கு யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தற்போது தொண்டர் ஆசிரியராக கடமையாற்றுவோரும் முன்னர் தொண்டர் ஆசிரியராக இருந்து பயிலுநர் ஆசிரியர்களாக கடமை புரிவோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (க-இ)

# பரீட்சை விண்ணப்பப்படிவம்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு9 கனிஷ்ட தொழில் நுட்பசான்றிதழ் பரீட்சை டிசம்பர் 1993க்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 29ம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்திற்கு ஒப்படைக்க ஏதுவாக கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கும் வண்ணம் பாடசாலை அதிபர்களை யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (இ)

# படகில் படுத்துறங்கியவர்மீது ஷெல் வீழ்ந்து வெடித்தது

## சம்பவத்தைக் கண்டவர் தகவல்

(நெல்லியடி)

நித்திரை வருகின்றது படகினுள் படுக்கிறேன் என்று சொல்லி உறங்கியவர் இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் தலை சிதறி இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்தார்.

இவ்வாறு நேற்று முன்தினம் நள்ளிரவு ஆலங்கேணி குஞ்சுப் பரந்தனில் ஆனையிறவு இராணுவத்தால் ஏவப்பட்ட ஷெல் வீச்சில் படகினுள்பலியான படகோட்டியான இன்பருட்டியைச் சேர்ந்த செல்வநாயகம் ரஞ்சகுமார் (வயது 16) என்னும் இளைஞனுக்கு அருகில் படகில் படுத்திருந்து மயிரிழையில் உயிர் தப்பிய இன்பருட்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நவரத்தினராசா கோணேஸ்வரன் (வயது 30) தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்கு பொருட்களை ஏற்றும் நோக்குடன் தனித்தனிப் படகில் அக்கரைக்கு இரவு 10-00 மணிக்கு சென்றடைந்தோம்.

அங்கு பொருட்கள் ஏற்றுவதற்கு வசதியின்மையால், மறுநாள் ஏற்றுவோமென்று நினைத்து, ஒவ்வொரு படகினுள் நாம் ஏறிப்படுத்து உறங்கலானோம்.

நித்திராதேவி எம்மை நன்கு அணைத்த நேரமான நள்ளிரவு 1-15மணியளவில் ஆனையிறவுப் பகுதியிலிருந்து கூவிக்கொண்டு வந்த ஷெல் ஒன்று எனக்கருகில் நின்ற படகில் வீழ்ந்து வெடித்தது.

அப்படகைப் பார்ப்பதற்கு நான் சென்ற சமயம் இறந்தவர் தலை சிதறிய நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்து துடிதுடித்ததைக் கண்டேன்.

பின்னர் வேறு ஓட்டிமாரின் உதவியுடன் இறந்தவரின் சடலத்தை எனது படகிலேற்றிக் கொண்டு கிளாலிக் கரையை வந்து சேர்ந்தோம் என்றார். (160 இ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கரவெட்டி 'ஜிம்ரேகலிஸ்' கல்வி நிறுவனத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. அனைவரையும் இதில் தவறாது கூடுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பவிருக்கும் மகஜரில் இதுவரை கையொப்பமிடாதவர்கள் இன்று மாலை 3-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் கூடுமாறு பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வெட்டுப்புள்ளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீட மாணவர்களும், கிளிநொச்சி வலைய பாடசாலை மாணவர்களும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியிலும், கண்டனப் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலிலிருந்து ஆரம்பமாகும் இப்பேரணி கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் முடிவடையும். கண்டனப் பொதுக் கூட்டமும் இடம் பெறவுள்ளது. (க-இ)

## தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இன்றைய போர்ச்சூழ்நிலையில் எமது மக்கள் மத்தியில் ஏற்படும் பல்வேறுவிதமான சமூகப் பிரச்சினைகள், சமூக குற்றங்கள் ஆகியவற்றைக் களைந்து சமாதானமும், சமூக நீதியும் கொண்ட ஒரு உன்னத சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் காவல்துறை செயல்பட்டு வருகின்றது.

கடந்தவருடம் 1-1-92 முதல் 30-9-92 வரை யாழ் குடாநாட்டில் மட்டும் 4157 பாரிய குற்றச்செயல்களின் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனால் இவ்வருடம் 1-1-93 தொடக்கம் 30-9-93 வரை 1220பாரிய குற்றச்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் மட்டுமே பதிவாகியுள்ளன.

ஆகவே சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் முதல் 9 மாதங்களில் 2937 குற்றச்செயல்கள் குறைந்துள்ளன. இது எமது தமிழீழக் காவல்துறைக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். அதுடன் எமது போராட்டத்துடன் மக்களும் இணைந்து செயல்படுகிறார்கள் என்பதையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

முக்கியமாக பெண்களுக்கெதிரான குற்றச்செயல்கள், கடந்த வருடம் 9 மாதங்களில் 1084 முறைப்பாடுகள் பதிவாகின. ஆனால் இவ்வருடம் 9 மாதங்களில் 120 முறைப்பாடுகள் மட்டுமே பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது என்று திரு. நடேசன் கூறினார். (162-வி-இ)

## ஆளுநர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை விமான நிலையம் வந்த முதல்வரும், ஆளுநரும் தனித்தனியே அமைக்கப்பட்ட வெவ்வேறு பந்தல்களில் தமது சகாக்களுடன் காணப்பட்டனராம்.

தமிழக முதல்வரும் அவரது அமைச்சர்களும் ஒரு பந்தலிலும், தமிழக ஆளுநர் சென்னாரெட்டியும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் வேறு ஒரு பந்தலிலும் நின்றிருந்தனர்.

விமான நிலையத்தில் மரியாதை நிமித்தமாகத்தானும் முதல்வரும் ஆளுநரும் சந்திக்கவில்லையென தெரிவிக்கப்பட்டது. (க-இ)

## அரங்கப் போட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் திரு அம்பரசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பரிசுபெற்ற கலைஞர்களுக்கு தமிழீழதேசியத்தலைவர் திரு.வே. பிரபாகரனால் ஒப்பமிட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இச்சான்றிதழை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்செல்வன் கலைஞர்களுக்கு வழங்கினார். விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் சிறப்புரையும் இடம்பெற்றது. (158-க)

## இனவிகிதாசார

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்க சேவை, மாகாண சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு புதியவர்கள் நியமிக்கும்போது இனிமேல் இன விகிதாசார முறை கடைப்பிடிக்கப்படமாட்டாதெனவும் அம்முறை விரைவில் ரத்தாகும் எனவும் கடந்த வாரம் அரசு அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (கி-இ)

## சென்னாரெட்டியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கக்கூடாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆளும் இ. காங்கிரசுடன் அ. தி. மு. க. இணையவேண்டுமானால் மேற்படி இரு நிபந்தனைகளையும் இந்திரா காங்கிரஸ் கட்சி ஏற்கவேண்டும் எனவும் தமிழக முதல்வர் தெரிவித்துள்ளதாகவும் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

முதல்வர் ஜெயலலிதாவின் மேற்படி இருநிபந்தனைகளுக்கும் இ. காங்கிரஸ் தரப்பிலிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லையென்றும் அப்பத்திரிகைகள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில் நேற்று பிரதமர் நரசிம்மராவைச் சென்னையில் சந்தித்த தமிழக இ. காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி செல்வி ஜெயலலிதா முதல்வராக இருக்கும்வரையில் அ. தி. மு. க. இந்திரா காங்கிரஸ் கூட்டு கிடையாது என திட்டவட்டமாக தெரிவித்து விட்டாராம்.

பிரதமர் நரசிம்மராவுக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் இடையில் நேற்று சுமார் 20 நிமிடங்கள் மட்டுமே பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் அதுவும் காரியாலய அலுவல்கள் சம்பந்தப்பட்ட விடயங்களே பேச்சுவார்த்தையில் இடம் பெற்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-இ)

## அதி நவீன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரக டாங்கிகளை கொள்வனவு செய்வது குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக மேலும் தெரியவருகிறது.

தற்போது அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, போன்ற நாடுகள் பயன்படுத்தும் அதி வலுவுள்ள பாரிய யுத்த டாங்கிகளை கொள்வனவுசெய்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறதாம்.

அதேவேளையில் ஸ்ரீ லங்கா அரசால் செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டாங்கிகளில் பல பழுதடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பழுதடைந்த இந்த டாங்கிகளை திருத்துவதற்கு விசேட நிபுணர்களைக்கொண்ட குழுவை செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து வரவழைக்குமுயற்சிமேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறியவருகிறது. (க)

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்கின்றார்கள், சில தமிழ் இளைஞர்கள் நாலு, ஐந்து முறை பொலிஸாரினால் கைது செய்யப்படுகின்றார்கள். கைது செய்யப்படும் இளைஞர் விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்பட்டால் அவரை மீண்டும் கைது செய்யாதபடி ஒரு உத்தரவாதப் பத்திரத்தை அவர்களுக்கு வழங்கும்படி நாம் பல தடவைகள் பொலிஸாருக்கு எடுத்துரைத்துள்ள போதிலும் எதுவித பலனும் இதுவரை கிடைக்கவில்லை.

பெரும்பாலும் வெள்ளி, சனி ஞாயிறு நாட்களிலேயே தமிழ் இளைஞர்கள் அதிகளவில் கைது செய்யப்படுகின்றார்கள். கைதாவோர் விடுதலைப்புலிகளாக இருந்தாலும்கூட அவர்களை உடனடியாக நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை செய்த பின்பே தண்டனை வழங்கப்படலாம்.

இதைவிடுத்து வயது வித்தியாசமின்றி தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது தடுக்கப்படுவது பின்பு அவர்களை சித்திரவதை செய்வது போன்ற செயல்களுக்கு உடனடியாக ஒரு முடிவு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இவர்கள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்துள்ளனர். (வி-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10, 336/B.